ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2166/35 - 2020 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2020.03.13

*2166/35 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

***சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)***

*10(அ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10(அ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் இறக்குமதிப் பொருட்கள் மீது, பொது மற்றும் முன்னுரிமை ஆகிய இரண்டினதும் சுங்கத் தீர்வை தொடர்பில் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் மேலதிகக் கட்டண அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2020, மாச்சு மாதம் 14 ஆந் திகதி தொடக்கம் 02 மாத காலம் வரை செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, மாச்சு 13.*

1A - PG 4965 — 567 (2020/04)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | | விவரணம் | சுங்கதீர்வை மீதான மேலதிகக் கட்டணம் |
| **27.10** | | --- | பெற்றோல்: | |
| | 2710.12.22 | ---- | 95 ஆம் இலக்க ஒக்ரேன் அடங்கிய பெற்றோல் | ஒரு லீற்றருக்கு ரூபா 15.00 |
| | 2710.12.29 | ---- | பிற | ஒரு லீற்றருக்கு ரூபா 15.00 |
| | | --- | வாயு எண்ணெய் / டீசல் : | |
| | 2710.19.41 | ---- | 10 மி.கி./ கி. கி. (பீபீஎம்) இற்கு மேற்படாதவாறு கந்தகம் அடங்கிய சுப்பர் டீசல் | ஒரு லீற்றருக்கு ரூபா 20.00 |
| | 2710.19.42 | ---- | 10 மி.கி./ கி. கி. (பீபீஎம்) இற்கு மேற்பட்ட ஆனால் 500 மி.கி/ கி.கி. (பீபீஎம்) இற்கு மேற்படாதவாறு கந்தகம் அடங்கிய பிற டீசல் | ஒரு லீற்றருக்கு ரூபா 11.00 |
| | 2710.19.49 | ---- | பிற | ஒரு லீற்றருக்கு ரூபா 20.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.